# சீறத்துன்னபி ﷺ

## நாள் 20



# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: மரணப் படுக்கையில் அபுதாலிப்
- பகுதி 2: அல்லாஹ்விடமிருந்து வஹீ மற்றும் அபுதாலிபின் மரணம்
- பகுதி 3: அபுதாலிபின் மரணத்திலிருந்து சில படிப்பினைகள்
- பகுதி 4: கதீஜா (ரலி) அவர்களின் மரணம்
- பகுதி 5: கதீஜா (ரலி) அவர்களின் வாழ்விலிருந்து ஆயிஷா (ரலி) கற்றுக்கொண்ட ஒரு படிப்பினை

## பகுதி 1: மரணப் படுக்கையில் அபுதாலிப்

- புறக்கணிப்பு முடிவுக்கு வந்தபோது, அது நபித்துவத்தின் 10வது ஆண்டாக இருந்தது.

- இந்த ஆண்டு துக்க ஆண்டு என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் மூன்று பெரிய தனிப்பட்ட இழப்புகள் நபி (ஸல்) அவர்களை ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்கின.

- முதலில், அவர்களது பெரிய தந்தை அபுதாலிப் மரணம், பின்னர் கதீஜா (ரலி) மரணம், அதன் பின்னர் தாயிஃப் சம்பவம்.

- புறக்கணிப்புக்குப் பிறகு அவர்கள் மக்காவுக்குத் திரும்பி 5 முதல் 6 வாரங்கள் மட்டுமே ஆகியிருந்தன; அபுதாலிப் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். விரைவில் அவர் இறந்துவிடுவார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

- அபுதாலிபின் மரணம் பற்றிய விவரங்கள் ஸஹீஹுல் புகாரீயின் ஒரு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



- அபுதாலிப் மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்தபோது, குரைஷிகளின் பெரியவர்கள் அவரது மரணப் படுக்கையில் அவரை அணுகினர்.

- அபுதாலிப் மீண்டும் அவரது சகோதரர் மகனிடம் பேசி, நாட்டில் உள்நாட்டுப் போர் நடக்காமல் இருப்பதற்காகக் கேட்டுக் கொண்டனர்.

- அதற்கு அவர்கள் கூறிய நிபந்தனை என்னவென்றால், அவர்களின் விவகாரங்களில் நபி (ஸல்) தலையிடாத வரை, அவர்கள் நபி (ஸல்) அவர்களின் விவகாரங்களில் தலையிட மாட்டார்கள் என்பதுதான்.

- அந்நேரம் நபி (ஸல்) அங்கு வர நேர்ந்தது. அவர்கள் அபுதாலிப் மரணப் படுக்கையில் இருப்பதையும், மக்காவின் பெரியவர்கள் அவரைச் சூழ்ந்து இருப்பதையும் கண்டார்கள்.

- பின்னர் அபுதாலிப் நபி (ஸல்) அவர்களிடம், ''என் சகோதரரின் மகனே! இங்குள்ள பெரியவர்கள் நமக்குள் விட்டுக்கொடுத்து அமைதியாக வாழ ஒரு சமாதான கொள்கையை முன்மொழிந்துள்ளனர்'' என்றார்.

- இதற்கு நபி (ஸல்) அவர்கள், ''என் பெரிய தந்தையே! அவர்கள் நான் கூறும் ஒரு வார்த்தையைக் கூறினால், இதை ஒத்துக்கொள்கிறேன். இந்த ஒரு வார்த்தை அவர்களுக்கு அரேபியர்கள் மற்றும் அரேபியர்கள் அல்லாதவர்களை விட அவர்களுக்கு மேலாதிக்கத்தைக் கொடுக்கும்'' என்றார்கள்.

- உடனே அபூஜஹ்ல் எழுந்து, ''அந்த வார்த்தை என்ன? நிச்சயமாக, உங்கள் விருப்பத்தை நாங்கள் பத்து மடங்கு அதிகமாக நிறைவேற்றுவோம்'' என்றான்.

- நபி (ஸல்) அவர்கள், ''நான் உங்களிடமிருந்து விரும்புவது எல்லாம், 'லா இலாஹ இல்லல்லாஹ்!' என்ற வார்த்தையைத்தான்'' என்று கூறினார்கள்.

- அவர்கள் உடனடியாக ஏளனமாக கைதட்டி, ''நாங்கள் எங்களது தெய்வங்களையெல்லாம் ஒரே கடவுளாக இணைக்க வேண்டும் என்று எப்படி நீங்கள் எதிர்பார்க்களாம்!'' என்று கேட்டனர்.

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் அபுதாலிபை நோக்கி, ''என் பெரிய தந்தையே! நீங்கள் 'லா இலாஹ இல்லல்லாஹ்!' என்று சொல்லுங்கள். நீங்கள் இந்தக் கலிமாவைச் சொன்னால், உங்களைக் காப்பாற்ற அல்லாஹ்வின் முன் எனக்கு ஒரு காரணம் கிடைக்கும்'' என்று கூறினார்கள்.

- அபுதாலிப் அதைச் சொல்ல எத்தனித்தார். ஆனால் அவருடன் அபூஜஹ்லும் அப்துல்லாஹ் இப்னு உமையாவும் இருந்தனர்.

- அவர்கள் அவரிடம், ''ஓ அபுதாலிபே! நீங்கள் உங்கள் தந்தை அப்துல் முத்தலிஃபின் மதத்தை விட்டு வெளியேறப் போகிறீர்களா?'' என்று

கேட்டனர்.

- அபுதாலிப் நபி (ஸல்) அவர்களை மிகவும் அதிகமாக நேசித்தார். ஆனால் அவருக்கு அவர்களைவிட பிரியமானவர் அவரது தந்தை மட்டுமே. அப்துல் முத்தலிஃபின் வாரிசாக இருப்பதன் மூலம் அவருக்குக் கிடைத்த கௌரவமும், மரியாதையும்தான் இதற்குக் காரணம்.

- நபி (ஸல்) அவர்கள் தன்னால் முடிந்தவரை முயற்சி செய்தார்கள். ஆனால் அபுதாலிப் கலிமாவை உச்சரிக எத்தனிக்கும்போதெல்லாம், அபூஜஹ்லும், அப்துல்லாவும், அபுதாலிபிற்கு அவரது தந்தை அப்துல் முத்தல்லிஃபின் மதத்தைப் பற்றி நினைவூட்டிக் கொண்டே இருந்தனர்.

- அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே இருந்ததால் இறுதியில் அபுதாலிப் தான் அப்துல் முத்தல்லிஃபின் மதத்தில் இருப்பதாகக் கூறினார்.

- இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், ''உங்களை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் கேட்பேன். அதை அவன் தடுக்கும் வரை நான் அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டே இருப்பேன்'' என்று கூறினார்கள்.

- பின்பு நபி (ஸல்) அவர்கள் அபுதாலிபின் வீட்டை விட்டு வெளியேறி விட்டார்கள்

## பகுதி 2: அல்லாஹ்விடமிருந்து வஹீ மற்றும் அபுதாலிபின் மரணம்

- இந்த சம்பவத்தைப் பற்றி, அல்லாஹ் குர்ஆனில் கீழ்கண்ட வசனங்கள் மூலம் வெளிப்படுத்துகிறான்.

- ''இணைவைப்பவர்களாக இருப்பவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருப்பினும், நிச்சயமாக அவர்கள் நரகவாசிகள் என்று தெளிவானபின், மன்னிப்புக் கோருவது நபிக்கும், நம்பிக்கை கொண்டவர்களுக்கும் தகுதியானதல்ல.'' (ஸூரா அத்தவ்பா 9: 113)

- மற்றொரு வசனத்தில், ''நபியே! நீர் நேசிப்பவர்களை எல்லாம் நிச்சயமாக நேர்வழியில் செலுத்திவிட முடியாது. ஆனால், அல்லாஹ்தான் நாடியவர்களை நேர்வழியில் செலுத்துகிறான்; மேலும், நேர்வழி பெற்றவர்களை அவன் நன்கறிகிறான்.'' (ஸூரா அல்கஸஸ் 28: 56)

- நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்குத் திரும்பி வந்தபின், அலீ (ரலி) நபியவர்களிடம் வந்து, ''உங்கள் பெரிய தந்தை இறந்துவிட்டார்'' என்று கூறினார்கள். (அதாவது அலீ (ரலி) தந்தையும், நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தையுமான அபுதாலிப் இறந்துவிட்டார்).

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களிடம், ''நீர் சென்று அவரை அடக்கம் செய்து வாருங்கள்'' என்று கூறினார்கள்.

- அதற்கு அலீ (ரலி) அவர்கள், ''ஆனால் அவர் ஒரு முஷ்ரிக் ஆயிற்றே!'' என்று பதிலளித்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் மீண்டும், ''நீர் சென்று அவரை அடக்கம் செய்து வாருங்கள். அது முடித்தவுடன் உடனே திரும்பி வாருங்கள்'' என்று கூறினார்கள்.

- அலீ (ரலி) அவர்கள், தனது தந்தை அபுதாலிபை அடக்கம் செய்தார்கள். அவரது உடலில் படிந்திருந்த தூசி வெளியேறும் முன்பாகவே, அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்தார்கள், அலீ (ரலி) அவர்களை ஆறுதல்படுத்த நபி (ஸல்) நீண்ட பிரார்த்தனை செய்தார்கள்.

- அலீ (ரலி) அவர்கள் இந்த நிகழ்வைப்பற்றிக் கூறும்போது, ''உலகங்களுக்காகவும், அதிலுள்ள அனைத்திற்காகவும் நான் அந்த துஆக்களை விட்டுக்கொடுக்க மாட்டேன்'' என்று கூறினார்கள்.

## பகுதி 3: அபுதாலிபின் மரணத்திலிருந்து சில படிப்பினைகள்

- ஸஹீஹுல் புகாரீயில் உள்ள ஒரு அறிவிப்பில், அபுதாலிபின் இளைய சகோதரர் அல்அப்பாஸ் நபி (ஸல்) அவர்களிடம், ''உங்கள்பெரிய தந்தைக்கு ஏதாவது நன்மை செய்தீர்களா? அவர் உங்களைப் பாதுகாத்து, உங்களுக்காக உறுதியுடன் குரைஷிகளை எதிர்கொண்டார்'' என்று கேட்டார்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''ஆம்! அவர் நரக நெருப்பின் எல்லையில் (வெளிப்புற எல்லையில்) இருக்கிறார். நான் இல்லையென்றால், அவர் நரகத்தின் ஆழத்தில் இருந்திருப்பார்'' என்று கூறினார்கள்.

- அபுதாலிபின் மரணத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய சில பாடங்கள்:



- அல்லாஹ்வின் கட்டளையை விட புனிதமானது எதுவுமில்லை; அல்லாஹ் தான் விரும்பியதைச் செய்கிறான்.

- ஒரு நபர் ஒரு சிறந்த தலைவராக இருந்தாலும் அல்லது இந்த பூமியில் வாழ்ந்த மிக உன்னதமான நபியால் பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும் கூட, அல்லாஹ்வின் கட்டளை இறுதியானது. மேலும் நியாயத்தீர்ப்பு நாளில் எந்த சாக்குப்போக்கும் சொல்லமுடியாது.

- நாம் இங்கே கற்றுக்கொள்ளக்கூடிய மற்றொரு பாடம், தீய சகவாசத்துடன் சுற்றித் திரிவதால் ஏற்படும் ஆபத்துகள்.

- அபுதாலிபின் இறுதித் தோழர்கள் அபூஜஹ்ல் மற்றும் அப்துல்லாஹ் இப்னு உமையா; இவர்கள்தான் அவரை கலிமா சொல்லவிடாமல் தடுத்தவர்கள். அபுதாலிப் அவர்களுக்கு அடிபணிந்து, கலிமா சொல்லாமலேயே இறந்துவிட்டார்.

## பகுதி 4: கதீஜா (ரலி) அவர்களின் மரணம்

- அபுதாலிபின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட மற்றொரு இழப்பு, இன்னும் வேதனையான இழப்பு, அது நபி (ஸல்) அவர்களின் மனைவி கதீஜா (ரலி) அவர்களின் மரணம்.

- அபுதாலிப் இறந்த 40 நாட்களுக்குள் கதீஜா (ரலி) அவர்களின் மரணம்



நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

- நபி (ஸல்) அவர்களே அடக்கம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அவர்களே கப்ருக்குள் இறங்கி உடலை அடக்கம் செய்தார்கள்.

- கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, நபி (ஸல்) அவர்களின் முகத்தில் புன்னகையை பல மாதங்களாக பார்க்கவில்லை என்று பல சஹாபாக்கள் தெரிவிக்கின்றனர்.

- கதீஜா (ரலி) மீது நபி (ஸல்) அவர்கள் கொண்டிருந்த அன்பு ஈடு இணையற்றது. அவர்கள் இறந்து நீண்ட காலத்திற்குப் பிறகும், நபி (ஸல்) அவர்கள் பரிசுப்பொருட்களை வாங்கி, கதீஜா (ரலி) அவர்களின் தோழிகளுக்கு வழங்கி, அவர்களைப் பற்றி மிகுந்த போற்றுதலுடன் பேசுவார்கள்.

- இந்த இரண்டு பேரும் நபி (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள்.

- அபுதாலிப், நபி (ஸல்) அவர்களின் தந்தையின் வெளிப்பாடு; அவர் நபி (ஸல்) அவர்களை வெளியிடங்களில் பாதுகாத்தார். கதீஜா (ரலி) நபிக்கு மிக நெருக்கமானவராகவும், வீட்டிற்குள் அவர்களுக்கு ஆறுதல் அளித்தவராகவும் இருந்தார்.

- இரண்டு பேரின் மரணமும், ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்தது நபி (ஸல்)

அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதனால்தான் இந்த ஆண்டு துக்க ஆண்டு என்று குறிப்பிடப்படுகிறது.

## பகுதி 5: கதீஜா (ரலி) அவர்களின் வாழ்விலிருந்து ஆயிஷா (ரலி) கற்றுக்கொண்ட ஒரு படிப்பினை

- நபி (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) மீது கொண்டிருந்த அன்பைப் தெரிந்து கொள்ள, மதீனாவில் நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் நாம் அதைப் புரிந்து கொள்ளலாம். இது ஸஹீஹுல் புகாரீயில் கூறப்பட்டுள்ளது.

- ஒரு நாள், நபி (ஸல்) அவர்கள் தங்கள் மனைவி ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டில் இருந்தார்கள். அப்போது கதீஜா (ரலி) அவர்களின் சகோதரி ஹலா அங்கு வந்தார்.

- அவர் கதவைத் தட்டி உள்ளே நுழைய அனுமதி கேட்டார்.

- உறங்கும் தருவாயில் படுத்திருந்த நபி (ஸல்) அவர்கள், ஹலாவின் சத்தத்தைக் கேட்டவுடன், உடனடியாக எழுந்தார்கள். அவர்களது முகபாவனை மலர்ச்சியாக மாறியது.

- இதைக் கண்ட ஆயிஷா (ரலி) மிகவும் பொறாமைப்பட்டார்கள்.

- ஹலா அங்கிருந்து விடைபெற்றுச் சென்றதும், ஆயிஷா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், ‘‘நீங்கள் எவ்வளவு காலம் அந்த மூதாட்டியை (அதாவது கதீஜா (ரலி) அவர்களை) நினைவில் வைத்துக் கொண்டிருப்பீர்கள்’’ என்று கேட்டார்கள்.

- ஆயிஷா (ரலி) சொன்னதை நபி (ஸல்) அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால் தொடர்ந்து பொறாமையினால் அவர்களது எல்லை மீறி, ‘‘அல்லாஹ் அவரை விட சிறந்த ஒருவரை உங்களுக்குக் கொடுத்திருக்கும்போது, நீங்கள் எவ்வளவு காலம் குரைஷிகளின் பல் இல்லாத பழைய பெண்ணை நினைவில் வைத்துக் கொண்டிருப்பீர்கள்’’, என்று ஆயிஷா (ரலி) கூறினார்கள்.

- எப்போதும் கோபப்படாத நபி (ஸல்), இதைக்கேட்டு எரிச்சலடைந்து, ‘‘அவரை விடச் சிறந்த ஒருவரை அல்லாஹ் எனக்குக் கொடுக்கவில்லை.

- வேறு யாரும் எனக்கு ஆதரவளிக்காதபோது அவர் என்னை ஆதரித்தார்.

அந்த பாக்கியம் உனக்கு இல்லை, ஓ ஆயிஷாவே!

- எல்லோரும் என்னைப் புறக்கணித்தபோது அவர் தனது வாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்தார். அந்த பாக்கியம் உனக்கு இல்லை, ஆயிஷாவே!



- உலகம் எனக்கு துக்கத்தைத் தந்தபோது அவர் எனக்கு ஆறுதல் கூறினார். அந்த பாக்கியம் உனக்கு இல்லை, ஆயிஷாவே!

- அவர் மூலம் அல்லாஹ் எனக்குக் குழந்தைகளைக் கொடுத்தான். ஆனால் அல்லாஹ் என் மற்ற மனைவிகளிடமிருந்து இந்த பாக்கியத்தை எனக்குப் பறித்துவிட்டான்'' என்று கூறினார்கள்.

- அதற்குப் பிறகு, ''நான் கதீஜா (ரலி) பற்றி ஒருபோதும் வாய் திறக்கவில்லை'' என்று ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்.

- அபுதாலிப் மற்றும் கதீஜா (ரலி) ஆகியோரின் மரணத்திற்கு பிறகு, நபி (ஸல்) அவர்கள் எந்தவித குடும்ப மற்றும் அரசியல் ஆதரவும் இல்லாமல், அல்லாஹ்வின் பாதுகாப்பையே முழுமையாக நம்பியிருந்த நிலையில், வாழத்தொடங்கினார்கள். இதன் பின்பு மிக விரைவில் தாயிஃப் சம்பவம் நடந்தது. அதைப் பற்றி நாளை பார்க்கலாம், இன்ஷா அல்லாஹ்!